பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

DLB
DEVELOPMENT LOTTERIES
அபிவிருத்தி லொத்தர் சபையின் சீட்டிழுப்பு விபரங்கள் தினந்தோறும் 2ஆம் பக்கத்தில் பார்க்கவும்

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 45

வெள்ளிக்கிழமை
10 ஜனவரி 2025

மார்கழி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# பாதுகாப்பு அமைச்சுக்கு 442 பில். ரூபா ஒதுக்கீடு

## அள்ளி வழங்கியது அநுர அரசு

## கல்விக்கு 271 பில்லியன் ரூபா மட்டுமே

**கொழும்பு, ஜனவரி 10**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் பாதுகாப்பு அமைச்சுக்கு அளவுக்கு அதிகமான தொகையை அள்ளி வழங்கியுள்ளது. இதன்படி, 442 பில்லியன் ரூபா பாதுகாப்பு அமைச்சுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

11

## காணாமலாக்கப்பட்டோருக்கு தெளிவான பதில் வழங்குக!

### ஸ்ரீபவானந்தராஜா எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 10

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் விடயத்தில் ஒரு தெளிவான பதிலை வழங்கி, அவர்களின் உறவுகள் நிம்மதியான வாழ்க்கை வாழ்வதற்கு வழியேற்படுத்தப்படவேண்டும் என்று ஆளும்கட்சியான தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற

11

மன்னார் சதொச புதைகுழி

## மீட்கப்பட்ட என்புத்தொகுதிகள் யாழ். போதனாவில் ஆய்வு!

மன்னார், ஜன. 10

மன்னார் மனிதப் புதைகுழிகளில், சதொசப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட என்புத்தொகுதிகள் சில மேலதிகப் பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்காக, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி மருத்துவர் செ. பிரணவன் தலைமையிலான குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மன்னார் சதொச மனித

11

## இலங்கையின் கடன்கள்: இந்தியாவால் தள்ளுபடி!

கொழும்பு, ஜன. 10

இந்திய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கிய 780 மில்லியன் டொலர் கடனைத் தள்ளுபடி செய்துள்ளது என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்ட திட்டங்களுக்கு 390 மில்லியன் டொலரும், செயற்படுத்தப்பட்டுவரும் சில திட்டங்களுக்கு 211 மில்லியன் டொலரும், காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்கென 65 மில்லியன் டொலரும் சமிக்ஞை விளக்குகளுக்கென 14.9 மில்லியன் டொலரும் இந்தியாவால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. (ச-25-6)



இலங்கை – இந்திய நாடாளுமன்ற

## நட்புறவுச் சங்கம் மீள உருவாக்கம்

கொழும்பு, ஜன. 10

இலங்கை - இந்திய நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தை மீள உருவாக்குவதற்கு எதிர்பார்ப்பதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

11



## விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 10

பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவனில் இடம்பெற்ற விபத்தில் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். சங்கரப்பிள்ளை ஜெயசங்கர் (வயது-59) என்ற நபரே உயிரிழந்தவராவார். ஹைஏஸ் மற்றும் மோட்டார்சைக்கிள்

10

## துமிந்தவுக்கு மன்னிப்பே கிடையாது

கொழும்பு, ஜன. 10

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு எந்தக்

11

மண்ணெண்ணெய் அருந்திய

## பாலகன் பரிதாபச் சாவு!

யாழ்ப்பாணம், ஜன. 10

விளையாடிக்கொண்டிருந்தபோது, தவறுதலாக மண்ணெண்ணெயை எடுத்து அருந்திய குழந்தையொன்று உயிரிழந்துள்ளது. கோப்பாய்

11

## சீன வைரஸ் தொற்று இலங்கையில் இல்லை

விரிவு :- பக். 05

மதுபோதையில்

## சைக்கிளில் பயணித்தவருக்கு 25,000 ரூபா தண்டம் விதிப்பு!

### யாழ். மாவட்டத்தில் அதிரடித் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன.10

மதுபோதையில் சைக்கிளில் பயணித்தவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து மல்லாகம் நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

11

முச்சந்தி முராரி



'அப்ப இனிமேல் குடிமக்களுக்கு சைக்கிளும் கைகுடுக்காது கண்டியளோ'

உள்ளூராட்சித் தேர்தல்

## புதிதாக வேட்புமனுக்களை கோருவதற்குச் சட்டவரைவு

கொழும்பு, ஜன. 10

உள்ளூராட்சித் தேர்தலுக்காக புதிதாக வேட்புமனுக்களைக் கோருவதற்குரிய சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைக்கப்பட்டுள்ளது. மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரால் இந்தச் சட்ட வரைவு சபையில் முன்வைக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

இஸ்லாத்துக்கு அவதூறு

## ஞானசாரதேரருக்கு 9 மாதச் சிறை!

கொழும்பு, ஜன. 10

இஸ்லாத்துக்கு அவதூறு பரப்பியமைக்காக பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரருக்கு ஒன்பது மாத சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

10

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கல்வித் தவணைகள் அடுத்தவருடம் சீரடையும்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



**கொழும்பு, ஜன.10**
**2026 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து வழமையான ஒழுங்கில் பரீட்சைகளை நடத்துவதற்கும் பாடசாலைத் தவணைகளை நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
2026 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் பரீட்சைகள் முன்பு போல் வழமைக் குத் திரும்பும்.
2020 ஆம் ஆண்டு கொரோனாத் தொற்றுநோய் நிலைமை, 2021 - 2022 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, சமூக நெருக்கடி மற்றும் எரிபொருள் பற்றாக்குறை காரண மாக பாடசாலைத் தவணைக் காலங் கள் அந்தந்தத் தவணைகளைத் தாண்டியுள்ளன.
2025 ஆம் கல்வியாண்டில், 181 நாள்கள் பாடத்திட்டத்தைப் பூரணப் படுத்துவதற்குப் போதுமான கால அவகாசம் அளித்து, 2025 டிசெம் பரில் பாடசாலைத் தவணையை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
இதன்படி, எதிர்காலத்தில் பாடசா லைக் காலத்தை வழமைபோன்று பேணமுடியும் - என்றார். (ச-26)

எல்லைதாண்டிய மீன்பிடி

# இந்திய மீனவர்கள் 12 பேர் விடுதலை

எல்லைதாண்டி இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடியில் ஈடுபட்ட நாகை மாவட்ட மீனவர்கள் 12 பேர் நிபந்தனை அடிப்படையில் விடுதலை செய் யப்பட்டுள்ளனர்.
தடைசெய்யப்பட்ட இழுவைப்படகைப் பயன்ப டுத்தி இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து பருத்தித்துறைக் கடற்பரப்பில் கடந்த வருடம் நவம்பர் 11 ஆம் திகதி மீன்பிடியில் ஈடுபட்டபோது அவர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட் டனர். அவர்களை நீதிமன்றில் முற்படுத்திய போது மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டு வழக் கிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர். எனினும் கடற்படையைத் தாக்கி உடைமையைச் சேதப்ப டுத்திய குற்றச்சாட்டில் அவர்கள் மீது பருத்தித்து றைப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட் டிருந்தது.
நேற்றுமுன்தினம் குறித்த வழக்கு மீண்டும் பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் கிருசாந் தன் பொன்னுத்துரை முன்னிலையில் எடுத் துக்கொள்ளப்பட்டபோது அவர்களுக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்ததுடன் படகை அரசுடமையாக்கக் கட்டளையும் பிறப்பிக்கப் பட்டது. (ச-20)

# அரிசி இறக்குமதியில் பெருமளவு மோசடியாம்

## மஹிந்த அமரவீர குற்றச்சாட்டு


கொழும்பு, ஜன. 10
அரிசி இறக்குமதியில் பல கோடி ரூபா மோசடி இடம்பெற் றுள்ளதாக முன்னாள் விவசாய அமைச்சர் மஹிந்த அம ரவீர தெரிவித்துள்ளார்.
நாட்டரிசி மற்றும் பச்சை அரிசி வகைகளை இறக்குமதி செய் யும் போர்வையில் பெருமளவில் பாஸ்மதி அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களுக்குத் தெரிந்தே இந்த மோசடி இடம்பெறுகின்றது.
இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# லசந்த கொலை வழக்கில் கோத்தாபய சிக்குவார்!

சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக் கிரமதுங்கவின் கொலை தொடர்பான விசாரணைகளை 2026 ஜனவரி 8 ஆம் திகதிக்கு முன்னர் முன்னெடுக்குமாறு வலியுறுத்தப்பட் டால் முன்னாள் ஜனாதிபதி கோத்தா பய ராஜபக்ச கைதுசெய்யப்படுவதற் கான சாத்தியக்கூறுகள் காணப்படுவ தாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ள னர். 2009 ஜனவரி 8 ஆம் திகதி சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொல்லப்பட் டார். லசந்த விக்கிரம துங்கவின் கொலை தொடர்பான விசாரணை களை முன்னெடுத்த குற்றப்புலனாய் வுப்பிரிவினர் லசந்த விக்கிரமதுங்க வின் கொலையுடன் இராணுவ புல னாய்வுப் பிரிவுப் பணிப்பாளருக்குத் தொடர்பிருப்பதாகத் தெரிவித்திருந்த னர். மவுண்ட் லவேனியா நீதிமன்றத் தில் சமர்ப்பிக்கப்பட்ட முதற்கட்ட அறிக்கையில் திரிபோலிக் குழுவுக்கு லசந்தவின் கொலையுடன் தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந் தது. திரிபோலிக்குழுவைக் கோத் தாவே வழிநடத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-6)

# நீதியரசர்கள் நியமனம்

கொழும்பு, ஜன. 10
இரண்டு புதிய மேல்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளனர்.
சட்டத்தரணி கே. எம். எஸ். திஸாநாயக்க மற்றும் சட்டத் தரணி ஆர். பி. ஹெட்டியாராச்சி ஆகியோரே ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுச் சத்தியப்பிரமாணம் செய்துகொண் டனர். (ச-இ)



குட்டையைக் குழப்புகிறார் சாணக்கியன்

# தமிழரசின் சார்பில் சிறீதரன் பேசவில்லை

கொழும்பு, ஜன. 10
நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் கஜேந்திர குமார் பொன்னம்பலம் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற சந்திப்புக்கும் தமிழரசுக் கட்சிக்கும் சம்பந்தமில்லை என நாடாளுமன்ற உறுப்பி னர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித் துள்ளார். எதிர்வரும் 25 ஆம் திகதி, தமிழ்த் தேசியக் கொள்கையை வலியுறுத்தும் மூன்று பிரதான கட்சியினருக்கு இடையில் புதிய அரசியலமைப்புத் தொடர்பில் கலந்துரையாடல் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி கலந் துரையாடலில் ஈடுபடுவதற்கு சிறீதரனுக்கு கட்சி சார்பில், எவ்வித அறிவுறுத்தலும் வழங்கப்பட வில்லை. அத்துடன், இது ஒரு தனிப்பட்ட பேச் சாக இருக்கலாமே தவிர கட்சியின் உத்தியோ கபூர்வ பங்கேற்புடனானது அல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)


சுபிரி தன சம்பத DLB
திகதி: 09.01.2025 | தினம்: வியாழக்கிழமை | ஆங்கில எழுத்து: Y | வெற்றி வாரம்: 0419
வெற்றி இலக்கம்: 8 2 1 8 7 4 | செக்கண்ட்சான்ஸ் இலக்கம்: 72073
அடுத்த சுப்பர் ஜக்பொட்: 28,825,720.40

Super Ball DLB
திகதி: 09.01.2025 | தினம்: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 2685 | ஆங்கில எழுத்து: I | வெற்றி இலக்கம்: 31 45 46 48
அடுத்த சுப்பர் ஜக்பொட்: 78,958,207.20

சனிதா DLB
திகதி: 09.01.2025 | தினம்: வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து: D | வெற்றி இலக்கம்: 03 11 30 50 | வெற்றி வாரம்: 4846
அடுத்த சுப்பர் ஜக்பொட்: 63,333,212.00
செக்கண்ட் சான்ஸ் விஷேட இலக்கம் 100,000/- பணப் பரிசு: 51073

SASIRI DLB
திகதி: 09.01.2025 | தினம்: வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 0596 | வெற்றி இலக்கம்: 21 35 44

லக்ன ராசி DLB
திகதி: 09.01.2025 | தினம்: வியாழக்கிழமை
வெற்றி இலக்கம்: 07 25 28 48 | சீட்டிழுப்பு வாரம்: 4397 | அடுத்த சுப்பர் ஜக்பொட்: 3,249,080.40
மேசம் | விசேட இலக்கத்துக்கான பரிசு: 152321

KAPRUKA DLB
திகதி: 09.01.2025 | தினம்: வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து: H | வெற்றி இலக்கம்: 11 30 49 64 | அடுத்த சுப்பர் ஜக்பொட்: 561,357,150.60
வெற்றி வாரம்: 1861

அத கோடிபதி DLB
தினம்: வியாழக்கிழமை | திகதி: 09.01.2025
ஆங்கில எழுத்து: C | வெற்றி இலக்கம்: 13 39 57 62 | வெற்றி வாரம்: 2511
அடுத்த சுப்பர்ஜக்பொட்: 61,418,164.80


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரொஹிங்ய அகதிகளை நாடுகடத்த வேண்டாம்!

முல்லைத்தீவில் போராட்டம்

**முல்லைத்தீவு, ஜன. 10**

**இலங்கையில் தஞ்சமடைந்த ரொஹிங்ய அகதிகளை நாடு கடத்த வேண்டாம் என்றும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை இலங்கை பாதுகாக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில், ஐக்கிய நாடுகள் சபையின் ஓர் அங்கத்துவ நாடாக இலங்கை விளங்குகின்றது. எனவே ஐக்கிய நாடுகள் சபையின் கொள்கைகளுக்கு மதிப்பளிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

எனவே முல்லைத்தீவுக் கடலில் தஞ்சமடைந்த ரொஹிங்ய அகதிகள் விடயத்தில் மனிதாபிமான விழுமியங்களை நிலைநிறுத்தி அவர்களைத் தப்பிவந்த நாட்டுக்கே திருப்பி அனுப்பாதிருக்க வேண்டும் - என்றனர். (ச-19)

# கசிப்பு விற்றவருக்கு ரூ. 20,000 தண்டம்

சாவகச்சேரி, ஜன.10

யாழ்ப்பாணம் கைதடியில் சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் கசிப்புடன் கைதுசெய்யப்பட்ட நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்து 2 ஆயிரத்து 250 மில்லி லீற்றர் கசிப்புக் கைப்பற்றப்பட்டது .


அவருக்கு எதிரான வழக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்குத் தண்டம் விதிக்கப்பட்டது. (ச-25,9)



# அதிவேகத்தால் மாட்டுடன் விபத்து

## இளைஞன் பலி

யாழ்ப்பாணம் - பருத்தித்துறைப் பிரதான வீதியில் குறுக்கே சென்ற மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. விபத்தில் தும்பலை பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த மணிகண்டன் விஜயகுமார் (வயது-21) என்பவரே உயிரிழந்தவராவார். அதிகவேகமே இந்த விபத்துக்குக் காரணமென அச்சுவேலி பொலிஸார் விசாரணையில் தெரிவித்தனர். (ச-23)



வவுனியாவில்

# மரக்கடத்தல் முறியடிப்பு

வவுனியா, ஜன.10

வவுனியா நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று வியாழக்கிழமை அனுமதிப்பத்திரமின்றி சுமார் இரண்டு இலட்சம் பெறுமதியான 73 தேக்கு மரக்குற்றிகளை ஏற்றிச்சென்ற வாகனச் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.எம்.பி.ஆர்.கே திவுல்வெவ தலைமையிலான பொலிஸ் குழுவினர் முன்னெடுத்த விசேட நடவடிக்கையின்போது இந்தக் குற்றச் செயல் முறியடிக்கப்பட்டது. (ச-110,18)

# கம்பத்துடன் மோதி வாகனம் விபத்து

வவுனியா, ஜன.10

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் தொலைபேசி இணைப்புக் கம்பத்துடன் மோதுண்டு ஹைஏஸ் வாகனமொன்றுநேற்றுவிபத்துக்குள்ளாகியுள்ளது.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் குறித்த வாகனம் விபத்துக்குள் ளாகியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் வாகனம் மற்றும் தொலைபேசி இணைப்புக் கம்பம் என்பன பகுதியளவில் சேதமடைந்துள்ளன எனவும் வாகனத்தில் பயணித்தவர்களுக்கு எவ்வித உயிராபத்துகளும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-110)






ஒரு வீட்டுக்குள்ள உடையாரும் சடையாரும் இருந்தால் எப்பவும் பிரச்சினைதான். அதாலதான் வீட்டுக்கட்சிக்குள்ளையும் இப்ப ஒரே குழப்பம். அதுவும் இந்தமுறை எலக்சனில இப்பிடித் தோப்பன் எண்டு உடையார் எதிர்பாக்கேலை. கட்சித் தேர்தலிலதான் சடையாரிட்ட தோத்திட்டார் எண்டு பார்த்தால், இப்ப பார்லிமென்ட் தேர்தலிலையும் தோத்ததால ஆளுக்கு வெப்பியாரம் தாங்கமுடியேலையாம். எண்டாலும், தான் பதவியில இல்லாட்டியும் சடையாரை ஆட்டிவைக்கிறது எண்டு முடிவெடுத்து, தன்ர மட்டக்களப்புக் கைத்தடியை வைச்சுத்தான் இப்ப எல்லா வேலையளையும் பாக்கிறார். முந்தி உடையார் என்னென்ன செய்தாரோ, என்னென்ன கதைச்சாரோ அதைத்தான் கட்சிக்குள்ள உடையாரின்ர பொல்லும் பாக்கிறாராம். கட்சித்தலைவர் பதவியில இருந்து பாவையாரை நிப்பாட்டினது, போனமுறை வீட்டுக்கட்சியில இருந்து வெளியில போய் எலக்சன் கேட்டவையை கட்சியை விட்டே தூக்கினது எண்டு எல்லாத்தின்ர கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் எல்லாம் உடையார். வெளிப்பார்வைக்கு அதை உடையாரின்ர பொல்லுச் செய்தமாதிரித்தான் பிளான் பண்ணிச் செய்தவை.

இப்ப உடையாருக்கு இன்னொரு கௌரவப் பிரச்சினை. முந்தி உடையார் பதவியில இருக்கேக்க, சட்டப் பிரச்சினையள், அரசியலமைப்பு உருவாக்கம் எண்டதெல்லாத்துக்கும் தமிழ்த்தரப்பில இருந்து உடையாரத்தான் கூப்பிடுவினம். அதிலையும் அரசியலமைப்பை உருவாக்கின குழுவில இருந்தால், வரலாற்றில பேர் கிடைக்குமெல்லோ. இப்ப பதவி இல்லாததால உடையாரால அந்தக் குழுவுக்குள்ள இருக்கேலாது. உடையாரின்ர கைத்தடிக்கும் சட்டம் பற்றி தெரியாததால அவரையும் சேர்க்க மாட்டினம். இந்த நிலைமையிலதான் முன்னணியின்ர தலைவர், மிச்சத் தமிழ் எம்.பி.மாரையெல்லாம் சேர்த்துக் கொண்டு, தமிழ்ச் சனத்தின்ர உரிமையளைப் பேணுறமாதிரி இந்த அரசியலமைப்பை உருவாக்கிறதுக்காக அரசாங்கத்துக்கு அழுத்தம் குடுக்க நினைக்கிறார். இதுக்காக எல்லாத் தமிழ்க்கட்சிகளின்ர எம்.பி.க்களையும் சந்திச்சு, கதைச்சுக்கொண்டுமிருக்கிறார். உடையாரைப் போல முன்னணித் தலைவரும் சட்டங்களைக் கரைச்சுக் குடிச்சவர்தான். அவரின்ர ரத்தத்திலையே சட்டம் பரம்பரை பரம்பரையாக் கலந்திருக்கெல்லோ. அதால அவரை அரசியலமைப்புக் குழுவுக்குள்ள எடுத்து, 'இனப்பிரச்சினைக்கு என்ன மாதிரியான தீர்வை இந்த அரசியலமைப்பில கொண்டுவரலாம்?' எண்டு அட்வைஸ் கேட்டு, அதின்படிதான் அரசாங்கம் செய்யப்போகுதாம்.

கலியாண வீடெண்டாலென்ன, செத்தவீடெண்டாலென்ன மாலை தனக்குத்தான் விழோணும் எண்டு நினைக்கிற உடையாரால இப்பிடி முன்னணித்தலைவர் பேர் எடுக்கப்போறார் எண்டதைத் தாங்கமுடியேலை.அதுக்காக ஒரு கல்லில ரண்டு மாங்காய் விழுத்திற திட்டத்துக்காக தன்ர கைத்தடிக்கு உருவேத்தி விட்டிருக்கிறாராம். இதாலதான முன்னணித்தலைவரோ சடையார் அரசியலமைப்புப்பற்றி கதைச்சிருந்தால், அது அவரின்ர தனிப்பட்ட சந்திப்பாத்தான் இருக்குமே தவிர, இப்பிடிப் போய் கதையுங்கோ எண்டு கட்சி முடிவெடுக்கேலை. அதால முன்னணித்தலைவரை சடையார் சந்திச்சதை கட்சியின்ர முடிவாப் பாக்கக் கூடாது' எண்டு அலம்பியிருக்கிறார். இப்ப இந்த அரசியலமைப்பைப் பற்றி ஆரோட கதைக்கோணும், என்ன கதைக்கோணும் எண்டு தங்கட மத்தியகுழு வழிகாட்டுறபடிதான் எல்லாரும் நடக்கோணும் எண்டு உடையார் சொல்லியிருக்கிறாராம். உடையார் என்ன முடிவெடுக்கிறாரோ அதைத்தானே மத்தியகுழுவும் எடுக்குமெண்டது சின்னப்பிள்ளைக்கு கூடத் தெரியுமே. எப்பிடியாவது இந்த அரசியலமைப்பில தமிழர்களுக்கு தீர்வு கிடைக்க விடக்கூடாது எண்டதுதான் உடையார் குழுவின்ர எண்ணம். ஆனால் அது ஈடேறுமோ? இல்லாட்டி ஈடாடுமோ?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகக்கூடும். சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. வெளியூர் செல்ல நேரிடும்போது கைப் பொருள்களை கவனமாகப் பார்த்துக்கொள்ளவும்.

**மிதுனம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தாய்வழியில் சில சங்கடங்களைச் சந்திக்க நேரிடும். சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். பிற்பகலுக்கு மேல் தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும்.

**கடகம்:** பிற்பகலுக்கு மேல் எதிலும் நிதானமாக செயல்படவும். வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர் வருகையால் வீட்டில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். தந்தைவழி உறவினர்களால் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்களின் சந்திப்பு சங்கடம் தருவதாக இருக்கும்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சகோதரர்களால் ஆதாயம் உண்டு. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கக்கூடும். பழைய கடன்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. சிலருக்கு மகான்களின் தரிசனமும் ஆசிகளும் கிடைக்க வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** சிறு அளவில் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர்கள் வருகை உற்சாகம் தரும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பரபரப்பாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். சகோதர வகையில் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**மகரம்:** சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். குடும்பம் தொடர்பான வேலைகளுக்காக பயணம் மேற்கொள்ள நேரிடும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும்.

**கும்பம்:** மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேறுபாடு நீங்கி அந்நியோன்யம் உண்டாகும். குலதெய்வக் கோயிலுக்குச் சென்று நேர்த்திக் கடனை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். ஆனால், தேவையான பணம் கையிலிருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். நவீனரக ஆடைகளை வாங்கி மகிழும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.



## முதிரை மரங்கள் வெட்டல்
# மேல்வெடி வைக்கப்பட்டு சந்தேகநபர்கள் கைது

முல்லைத்தீவு, ஜன.10

முல்லைத்தீவு - உடையார்கட்டு பாவாடைக்கல்லாறு ஒதுக்கக் காட்டில் அத்துமீறி உள்நுழைந்து முதிரை மரங்களை வெட்டிய இருவர் புதுக்குடியிருப்பு வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினரால் மேல்வெடி வைக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலுக்கமைய வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினர் சம்பவ இடத்துக்கு விரைந்தபோது அவர்களைக் கண்ட சந்தேகநபர்கள் தப்பிச்செல்ல முற்பட்டபோதே திணைக்களத்தினர் மேல்வெடி வைத்துக் கைதுசெய்தனர். (ச-125)

# ஐஸ் போதையுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜன.10

ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய நல்லூர்ப்பகுதியில் வைத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 800 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

சந்தேகநபரை மேலதிக விசாரணையின் பின் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)



# எல்லைதாண்டிய மீன்பிடி; 10 இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜன.10

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடித்த 10 இந்திய மீனவர்கள் நேற்று அதிகாலை இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனக் கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் கஜான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவை அண்மித்த காரைநகர் கடற்பரப்பிலேயே ஒரு இந்திய விசைப்படகுடன் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் தணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (ச-23,27)

# கசிப்புடன் கைதானவருக்குப் பிணை

யாழ்ப்பாணம், ஜன.10

கசிப்புடன் கைதானவர் நீதிமன்றத்துக்கான திகதியிடப்பட்ட பின்னர் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார் என இளவாலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாதகலில் சகாயபுரம் பகுதியில் 750 மில்லிலீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த நிலையில் குறித்த நபர் நேற்றுமுன்தினம் இளவாலைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தார். (ச-125)



# கொடிகாமத்தில் கையெழுத்து வேட்டை

யாழ்ப்பாணம், ஜன. 10

பல வருடங்களாக விசாரணை எனும் பெயரில் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி முன்னெடுக்கப்பட்டுவரும் கையெழுத்துப் போராட்டம் மூன்றாம் நாளான நேற்று கொடிகாமம் பேருந்து நிலையத்துக்கு முன்பாக நடைபெற்றது.

இதன்போது பொதுமக்கள், சந்தை வியாபாரிகள் எனப் பலரும் ஆதரவளித்து கையெழுத்துகளைப் பதிவுசெய்தனர். (ச-125.20)

# தமிழாராய்ச்சி மாநாடு படுகொலை நினைவு

யாழ்ப்பாணம், ஜன.10

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்ட தமிழ்மக்களின் 51 ஆவது நினைவுதினம் இன்று வெள்ளிக்கிழமை முற்றவெளியில் உள்ள நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது நினைவுக்கற்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்படும்.

நினைவுதினத்தை முன்னிட்டு நினைவாலயத்தைச் சுற்றியுள்ள பகுதியைத் துப்புரவு செய்யும் பணிகள் நேற்றுக்காலை முன்னெடுக்கப்பட்டன. (ச-33-17)

# மரக்கறி விலை சரிவு

யாழ்ப்பாணம், ஜன.10

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக விலை அதிகரித்துக் காணப்பட்ட மரக்கறிவகைகளின் விலை தற்போது தளர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தைப்பொங்கலுக்குப் பின்னர் இவற்றின் விலை மேலும் குறைவடையலாமென மரக்கறிச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

திருநெல்வேலிச் சந்தை நிலவரப்படி, கத்தரிக்காய் கிலோ 250 ரூபாவாகவும், பயிற்றங்காய் கிலோ 300 ரூபாவாகவும், பாகற்காய் கிலோ 600 ரூபாவாகவும், பூசணிக்காய் 120 ரூபாவாகவும், தக்காளிப்பழம் கிலோ 300 ரூபாவாகவும், வெண்டிக்காய் கிலோ 100 ரூபாவாகவும், மரவள்ளிக்கிழங்கு கிலோ 200 ரூபாவாகவும், கோவா கிலோ 100 ரூபாவாகவும், பச்சைமிளகாய் கிலோ 800 ரூபாவாகவும், கீரைப்பிடி ஒன்று 100 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. (ச-33-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




# ஏனிந்தக் கள்ளமௌனம்?

'பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னமும் ஏன் நடைமுறையில் இருக்கின்றது?' என்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ. தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியில் இருந்தபோது பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு கடும் எதிர்ப்பை வெளிக்காட்டியிருந்தது. இந்தநிலையில், தற்போது பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதில் ஏன் அக்கறையற்றிருக்கின்றது? என்ற எதிர்க்கட்சித் தலைவரின் கேள்வி நியாயமானதே.1979ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டதில் இருந்து அந்தச் சட்டத்தால் நாட்டின் சிறுபான்மை மக்களே - குறிப்பாகத் தமிழ் மக்களே அந்தச் சட்டத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். பயங்கரவாதத் தடைச்சட்டம் வழங்கிய அளவுக்கதிகமான அதிகாரத்தால் தமிழ் மக்கள் வகை தொகையின்றிக் கைதுசெய்யப்பட்டு, எவ்வித விசாரணைகளும் இன்றி சிறைகளில் அடைக்கப்பட்டனர். சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்ட தமிழர்கள் விசாரணைகள் ஏதுமின்றி பல தசாப்தங்கள் சிறைகளில் தங்களின் வாழ்வைத் தொலைக்க இந்த பயங்கரவாதத் தடைச்சட்டமே காரணமாக இருந்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவேண்டும் என்று மிக நீண்டகாலமாகத் தமிழ் மக்களும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் வலியுறுத்தியபோதும் ஆட்சியாளர்கள் அதைக் கருத்தில் எடுக்கவில்லை. ஆனால் போர் முடிவுக்கு வந்த பின்னர், ஆட்சியில் இருந்தவர்கள் தங்களுக்கு எதிரானவர்களை அடக்குவதற்காகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை தெற்கிலும் பிரயோகிக்க ஆரம்பித்த பின்னரே அந்தச் சட்டத்தின் கொடூரமுகத்தை தெற்கு மக்களும் அனுபவிக்க ஆரம்பித்தனர். அப்போது எதிர்க்கட்சியாக இருந்த தேசிய மக்கள் சக்தியும் பயங்காரவாதத் தடைச்சட்டத்தின் இம்சைகளை அனுபவிக்க நேர்ந்தபோது, அவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். அதிகாரத்துக்கு வந்தால் பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக இல்லாதொழிக்கப்படும் என்று மக்களுக்கு வாக்குறுதியளித்திருந்த தேசிய மக்கள் சக்தி இப்போது அறுதிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்திருக்கின்றது. ஆனால் ஆட்சிக்கு வந்ததும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், மக்களுக்கு தாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் மெத்தனப்போக்கையே கடைப்பிடிக்கின்றது. ஆட்சிக்கு வந்ததும் பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக இல்லாதொழிக்கப்படும் என்று கூறியிருந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஆட்சியிலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான கைதுகள் தொடர்கின்றன. அந்தச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுக் காரணமின்றி அடைக்கப்பட்டுள்ளவர்களின் சிறைவாழ்வும் தொடர்கின்றது.


தேசிய மக்கள் சக்தி ஆளும்கட்சியாக மாறியபின்னர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாதொழிப்பதற்கான முயற்சிகளை இதுவரை ஆரம்பிக்கவில்லை. எதிர்க்கட்சியாக இருந்தபோதுநாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டுவந்த தேசிய மக்கள் சக்தி இப்போது அந்த விடயத்தில் கடும் மௌனத்தைக் கடைப்பிடிக்கின்றது. இந்தவிடயம் மட்டுமல்ல தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு, ஊழல் மோசடியாளர்கள் மீதான விசாரணை எனப் பலவிடயங்களில் இப்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கள்ளமௌனத்தையே சாதிக்கின்றது.தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளின் அடிப்படையிலேயே, அவர்களுக்கு ஆட்சிப்பீடமேறுவதற்கான மக்கள் ஆணை கிடைத்தது. மக்களால் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தை தேசியமக்கள் சக்தி அரசாங்கம் சரியான முறையில் பயன்படுத்தவேண்டும். சர்வதேச சட்டவிதிகளுக்கு ஒவ்வாத பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உடனடியாக ஆரம்பிக்கவேண்டியது அவசியம். எதிர்க்கட்சியில் உள்ளபோது ஒரு நிலைப்பாட்டையும், ஆளும்கட்சியாக மாறியபின்னர் ஒரு நிலைப்பாட்டையும் எடுப்பதாக இருந்தால், நாட்டில் கடந்தகாலங்களில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களுக்கும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கும் எந்த வித்தியாசமும் இருக்கப்போவதில்லை. நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த விரும்புவதாகக் கூறும் தேசிய மக்கள் சக்தி, அந்த மாற்றத்தை தனது அரசியல் செயற்பாட்டில் காட்டுவதே நாடு முன்னேற்றத்தை நோக்கிப் பயணிக்க வழிவகுக்கும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


நாளொரு நல்வார்த்தை

"கோபப்படுவது என்பது யாருக்கும் எளிது.
ஆனால் சரியான நபர் மீது சரியான அளவில் சரியான நேரத்தில்
சரியான நோக்கத்துடன் கோபப்படுவது எல்லோருக்கும் வராது.

– அரிஸ்ரோட்டில்–




# எச்.எம்.பி.வி. தொற்றுகள் நாட்டில் பதிவாகவில்லை

**கொழும்பு, ஜன. 10**

**சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது போல், சீனாவில் கண்டறியப்பட்ட எச்.எம்.பி.வி தொற்றுகள் எவையும் இலங்கையில் அண்மையில் கண்டறியப்படவில்லை என சுகாதார அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

வைரஸ் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக இருபது இடங்கள் பெயரிடப்பட்டுள்ளன. அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. தொற்றுநோய்த்தடுப்புப் பிரிவு தொடர்ந்தும் சுகாதார அமைச்சுக்கு வைரஸ் தொடர்பான விவரங்களை வழங்கிவருகிறது. ஜனாதிபதியும் இவ்விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளார். சந்தேகத்துக்கிடமாக ஒருவரை சோதனைக்குட்படுத்திய போது சோதனையில் எதிர்மறையான முடிவே வந்தது. எனவே ஊடகங்களைப் பொறுப்புடன் செயற்படுமாறும் அவர் கேட்டுக் கொண்டார். (ச-44)



# உயர்நீதிமன்ற செயற்பாடு தற்காலிகமாக இடமாற்றம்

கொழும்பு, ஜன. 10

உயர்நீதிமன்ற வளாகக் கட்டடத்தின் புதுப்பித்தல் காரணமாக, 2025 ஜனவரி 15 முதல் கொழும்பு 12 இன் அதிகார மாவத்தையில் அமைந்துள்ள புதிய எம்.சி.சி. கட்டடத்துக்கு உயர்நீதிமன்றச்செயற்பாடுகள் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்படவுள்ளன. அதேவேளை ஜனவரி 15 முதல் பழைய நீதி அமைச்சக கட்டடத்தில் அமைந்துள்ள புதிய மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு நீதிமன்றம் மீண்டும் அமர்வுகளை ஆரம்பிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# ஒரே நாளில் மீனவன் இலட்சாதிபதி

யாழ்ப்பாணம், ஜன.10

முல்லைத்தீவில் மீனவர் ஒருவரின் கரைவலையில் சுமார் 8000 கிலோ நிறையுடைய திருக்கை மீன்கள் பிடிபட்டுள்ளன. இதனால் அவர் ஒரே நாளில் இலட்சாதிபதியாகியுள்ளார்.

தென்பகுதியிலிருந்து வந்து முல்லைத்தீவில் தங்கியிருந்து தொழில் செய்யும் மீனவரின் கரைவலையிலேயே இவ்வாறு திருக்கை மீன்கள் கொத்தாகச் சிக்கிக்கொண்டுள்ளன. (ச-25-9-555)

# மியான்மர் அகதிகளுக்கு திடீர் சுகவீனம்

முல்லைத்தீவு, ஜன.10

முல்லைத்தீவு கேப்பாப்பிலவில் தங்கவைக்கப்பட்ட மியான்மர் அகதிகள் இருவர் திடீர் சுகவீனமுற்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். குறித்த இருவரும் வயிற்றுவலி காரணமாகவே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் பொலிஸ் பாதுகாப்புடன் சிகிச்சை பெற்றுவருகின்றனர் (ச-19)



# உயர்தர வசதிகளுடன் மருத்துவ ஆய்வுகூடம்

கொழும்பு, ஜன.10

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரத்துக்கேற்ப உயர்தர மருத்துவ ஆய்வுகூடமொன்று மூன்று வருடங்களுக்குள் இலங்கையில் நிர்மாணிக்கப்படும் என சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தற்போதுள்ள ஆய்வுகூடம் இலங்கை முழுவதற்கும் விநியோகிக்கப்படும் மருந்துகளைப் பரிசோதிப்பதற்குப் போதுமான வசதியற்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளுந்துச் செய்கையில் மஞ்சள் நோய்த்தாக்கம்


விவசாயிகள் கவலை



வவுனியா, ஜன.10

**வவுனியாவில் பிரதான பயிர்ச் செய்கைகளில் ஒன்றாகக் காணப்படும் உளுந்துச்செய்கையில் இம்முறை மஞ்சள் நோய்த்தாக்கம் பீடித்ததனால் விளைச்சல் குறைவ தற்கான வாய்ப்பு உள்ளதாக விவசா யிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

வவுனியா மாவட்டத்தில் 56-50 ஹெக்ரேயரில் இம் முறை உளுந்து பயிரிடப்பட்டுள்ளது.
அண்மையில் ஏற்பட்ட மழைவெள்ளத்துக்குப் பின்ன ரான காலப்பகுதியில் உளுந்துப் பயிர்ச்செய்கையில் மஞ்சள் நோய்த்தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது.
உளுந்துக்கு விலை நிர்ணயம் இல்லாமையால் செலவு செய்யும் பணத்தைக்கூட பெற்றுக்கொள்ளமுடியாத நிலை காணப்படுகின்றது.
இந்தநிலையில் நோய்த்தாக்கங்களும் பாதிப்பை ஏற்ப டுத்துவதால் எதிர்வரும் காலங்களில் உளுந்துச் செய் கையைக் கைவிடவேண்டிய நிலைமை ஏற்பட வாய்ப் புள்ளது என்றும் குறிப்பிட்டனர். இதுதொடர்பில் வவு னியா மாவட்டப் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி மாலினி முரளி தெரிவிக்கையில்,
மஞ்சள் நோய்த்தாக்கம் பயிர்களில் ஏற்பட்டுள்ள நிலை யில் விவசாயிகளுக்கு அதனை கட்டுப்படுத்துவதற் கான ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது - என் றார். (ச-110)



சுழிபுரத்தில்

## இந்திய மீனவர் அடாவடி மீன்பிடி வலைகள் நாசம்!

யாழ்ப்பாணம்,ஜன.10

இந்திய இழுவைப்படகுகள் அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டமையால் யாழ்ப்பா ணம் - சுழிபுரம், காட்டுப்புலம் பகுதி மீனவர் ஒருவ ரின் ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் அறுக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பில் பாதிக்கப்பட்ட மீனவர் தெரிவிக்கையில்,
இந்திய மீனவர்களின் இந்த அடாவடியால் 32 வலை களில் 26 வலைகள் அறுக்கப்பட்டுள்ளன. எஞ்சிய வலைகளும் சேதமடைந்துள்ளன. ஏழு இலட்சம் ரூபாவை வங்கியில் கடன்பெற்றே இந்த வலைகளை கொள்வனவு செய்தேன். தற்போது வங்கிப் பணத் தைச் செலுத்தமுடியாமல் வாழ்வாதாரம் இழக்கப்பட் டுள்ளது. புதிதாக வந்த அரசு இதற்கு ஒரு தீர்க்கமான முடிவு எடுத்து இந்திய இழுவைப்படகுகளை கட்டுப்ப டுத்தவேண்டும் - என்றார். (ச-27)



## 'சொல்லுக்கு முன் செயல்' பூநகரியில் செயற்றிட்டம்!

யாழ்ப்பாணம், ஜன.10

பூநகரிப் பிரதேசசபை தனது 2025 ஆம் ஆண்டின் மகுட வாக்கியமான 'சொல்லுக்கு முன் செயல்' இன் கீழான மக்களுக்கான நலப்பணிகளை ஆரம்பித் துள்ளது. அதற்கமைய முதற்கட்டமாக பிரதேசசபை ஆளுகைக்குட்பட்ட பிரதேசப் பாடசாலை மாணவர்கள் தமது புதிய ஆண்டுக்கான கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. அதேபோன்று தைப்பொங்கலை முன்னிட்டு பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், கைவிடப்பட்ட முதியவர்கள்,விசேட தேவையுடையோர் போன்ற ஆறு வகைப்படுத்தலின் கீழ் சுமார் 1.8மில் லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மக்கள் நலத்திட்டங்கள் வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ச-20)

## வடக்கில் முதலிடுவதற்கு புலம்பெயர் தமிழர் ஆர்வம்!

யாழ். மாவட்ட எம்.பி.கள் சுட்டிக்காட்டு

கொழும்பு,ஜன.10

வெளிநாட்டில் வாழ்கின்ற தமிழர்கள் வடக்கில் முதலீடு செய்வதற்கு தமது ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளனர் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, மருத்துவர் பவானந்தராஜா ஆகியோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.
வெளிநாட்டு விவகார அமைச்சர் விஜித ஹேரத்துடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர்கள் இதனைக் குறிப்பிட்டனர். இதன்போது வெளிநாட்டு விவகார அமைச்சர், வடக்கு மாகாணத்தில் ஐந்து தொழிற்பேட்டை நிலையங்களை அமைப்பதற்காக காணிகள் இனங்கா ணப்பட்டுள்ளதாகவும் விரைவில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் ஆர்வமுள்ளவர்கள் இலங்கை முதலீட்டு சபையின் ஊடாகத் தங்கள் செயற்றிட்டங்களை முன்வைக்கமுடியும் எனவும் குறிப்பிட்டார். (ச-33-20)

## சிறைபிடிக்கப்பட்ட அகதிகள் கேப்பாப்பிலவுக்கு விடுவிப்பு

முல்லைத்தீவு, ஜன.10

மியான்மாரில் இருந்து வந்த அகதி கள் படகில் ஆட்கடத்தலுடன் தொடர்புடையவர்கள் என்று கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட 12 மியான்மர் அகதி களும் விடுதலைசெய்யப்பட்டு முல்லைத்தீவு கேப்பாபிலவுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.
ஏனைய 103 மியான்மர் அகதிகள் கடந்த மாதம் அழைத்துவரப்பட்டு கேப்பாப்பிலவு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ச-19)

## ஓட்டோ வாங்கித் தராததால் இளைஞர் உயிர்மாய்ப்பு

சாவகச்சேரி, ஜன.10

தவறான முடிவெடுத்து இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளாரென அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். புத்தூர் கிழக்கு புத்தூர் பகுதியைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
பெற்றோரிடம் முச்சக்கரவண்டி எடுத்துத் தருமாறு கேட்டு தகராறில் ஈடுபட்ட நிலையில் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளாரென குடும்பத்தினரால் தெரிவிக்கப்படு கின்றது. (ச-23)



## அராலி வீதியிலிருந்த குழி வீதி அதிகாரசபை மூடியது

யாழ்ப்பாணம், ஜன.10

அராலிப் பாலத்தில் இருந்து அராலித் துறைக்குச் செல்லும் வீதியில் உள்ள மதகு ஒன்று சேதம டைந்த நிலையில் பெரிய குழியொன்றும் தோன் றிக் காணப்பட்டது. இதனால் பயணிகள் அச்சத் தின் மத்தியில் பயணத்தைத் தொடர்ந்தனர்.
இதுதொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதுடன் பத்திரி கைகளிலும் செய்திகள் பிரசுரமாகின.
இந்தநிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையி னர் விரைந்து நடவடிக்கை எடுத்து குறித்த குழி யைச் சீர்செய்து பாதுகாப்பான பயணத்தை உறு திப்படுத்தினர். (ச-27)

## முட்டை விலை மீண்டும் உயர்வு

யாழ்ப்பாணம்,ஜன.10

முட்டையின் விலை மீண்டும் அதிகரித் துள்ளதாகச் சந்தை வட்டாரம் தெரிவித் துள்ளது.
பண்டிகைக் காலத்தில் அதிகளவு முட் டைகள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவ ரப்பட்டதால் அவற்றின் விலை 26 ரூபாவரை சரிவடைந்து காணப்பட்டது. இந்தநிலையில் தற்போது மீண்டும் முட்டையின் விலை 38 ரூபா வரை வில் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (ச-33-17)

## இளைஞனைக் கடத்தித்தாக்குதல் பிரதான சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், ஜன.10

இளைஞர் ஒருவரைக் கடத்தித் தாக்குதல்நடத்திய குற்றச்சாட்டில் தலைமறைவாகியிருந்த பிரதான சந்தேகநபர் மானிப்பாய்ப் பொலி ஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.
கடந்த ஆண்டு யாழ்.- மானிப்பாய் வீதியில் இளைஞர் ஒருவரை வழி மறித்து வரவழைத்து வாகனம் ஒன்றில் சண்டிலிப்பாய்க்குக் கடத்திச் சென்று அவர் மீது தாக்குதல் நடத் திவிட்டு தப்பிச்சென்றது. இதுதொ டர்பில் மானிப்பாய்ப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் மூவரைக் கைதுசெய்தனர். மேலு மொரு சந்தேகநபர் பல மாதங்க ளாக தலைமறைவாகியிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவைகளுடன் கற்றல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.10 பறவைகளுக்கான பயணவழிக் கற்றல் நிகழ்வு நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் பண்ணை வீதியில் பிற்பகல் 3.30 மணிக்கும், நாளைமறுதினம் ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவில் காலை 10.30 மணிக்கும், 13 ஆம் திகதி திங்கட்கிழமை சரசாலை குருவிக்காட்டில் மாலை 3.30 மணிக்கும் இடம்பெறவுள்ளது. பங்குபற்ற விரும்புவோர் தமது வரவை 0767093 342, 0772658002 எனும் வட்சப் இலக்கங்களினூடாக உறுதிப்படுத்திக்கொள்ளவும். நிகழ்வுக்கு வருகைதருவோர் இயற்கையுடன் ஒத்த நிறங்களையுடைய ஆடைகள் அணிந்து தண்ணீர், தொப்பி கொண்டுவருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச-25)

## மரண அறிவித்தல்



**அருட்சகோதரி மேரி வில்பிறெட் முடியப்பு தி.கு**

யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி வில்பிறெட் முடியப்பு தி.கு நேற்று (09.01.2025) வியாழக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு (10.01.2025) இன்று வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணிக்கு யாழ்ப்பாணம், பிரதான வீதியில் அமைந்துள்ள திருக்குடும்ப மாகாண இல்ல சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

121, பிரதான வீதி
யாழ்ப்பாணம்

தகவல்:
அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்
மாகாணத் தலைவி

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
24.10.1956

மறைவு
02.01.2023

அமரர் திருமதி
**சுப்பையா பூமாதேவி**

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள் விண் நோக்கிச் சென்று
இரண்டாண்டுகள் சென்றாலும் கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

கைதடி தெற்கு,
கைதடி.
075 416 9276


உங்கள் நினைவுகளோடு வாழும்
குடும்பத்தினர்

(CS 57145) (N-1)

# மரண அறிவித்தல்

## கந்தையா இரவீந்திரன்

(ஓய்வு பெற்ற கிராம அலுவலர் J/191 இணுவில் மேற்கு, சமாதான நீதவான்)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இரவீந்திரன் அவர்கள் நேற்று (09.01.2025) வியாழக்கிழமை இறைவனடி சேரந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா-நாகம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற வனஜாவின் அன்புக் கணவரும், அருணபிரசாத் (ஆய்வு கூட உதவியாளர், யாழ் பல்கலைக் கழகம்), சோபிகா (ஆசிரியர் மு/கைவேலி கணேச வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிரூபிகா (கணக்காளர்) அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான குலேந்திரா (உதவி அரசாங்க அதிபர்), சத்தியமூர்த்தி (தபால் அதிபர்), கமலவேணி, சத்தியவேணி, விஜயவேணி, அருள்சோதி மற்றும் சுந்தரமூர்த்தி (MLT) சண்முகேந்திரன் (பெற்றோலியம் கூட்டுத்தாபனம்), கலாவதி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோரின் சகோதரரும், தயாபரன் (பிரான்ஸ்), பிரபாவதி, மகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2025) வெள்ளிக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 059 7402

(CR 43060) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினைந்தாவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
25 . 12 . 1935

மறைவு
07 . 01 . 2009

# அமரர் ஆண்டி முருகையா

திதி: சுவர்க்கவாயில் ஏகாதசி

பாசத்தால் பண்பு படைத்து
நேசத்தால் எமையணைத்தீர்
ஆண்டுகள் நூறு சென்றாலும்
நிலைத்திருப்பீர் எம் மனதில்


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
உங்கள் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கும்...

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

**தியேட்டர் லேன்,**
**இணுவில் கிழக்கு.**

(cs.2231) N-1)

## பன்னிரு மாதமதில் பாலாய் பொங்கும் உன் நினைவுகள்.....



தோற்றம்
31 • 10 • 1982

மறைவு
23 • 12 • 2023

# அமரர் பாலசுந்தரலிங்கம் மதனகுமார்

(உத்தியோகத்தர், இலங்கை வங்கி, ஒட்டுசுட்டான்)

மதனகுமார் என உதித்தாய் எம்முடன் உன் அன்பால்
மற்றவர் போற்ற மாண்புடன் வாழ்ந்தாய் பண்பால்
மறக்கமுடியுமா? ஓராண்டாகியும் வாடுகிறோம் உள்ளத் துடிப்பால்
மாயவன் மடியில் சென்றாயோ வைகுண்ட ஏகாதசியில் சுவர்க்கத்தின்பால்
மாறாத்துயரில் துடிக்கின்றோம் சோதரர்நாம் துயரத்தின்பால்

பாலும் கசந்து வருந்துகிறோம் உறவுகள் நாம் பாசத்தின்பால்
பறந்தனையோ பார்விட்டு பரமன் பற்றின்பால்
பார்க்கும் இடமெல்லாம் உன்முகம் தெரிகிறது
- மறக்கவொண்ணா பிணைப்பின் பால்
பாரில் வாராயோ என ஏங்குகிறோம் இரக்கத்தின்பால்

வங்கிக்காய் அர்ப்பண சேவை செய்தாய் - கடமை உணர்வின்பால்
வந்தவர் எல்லாம் வருந்தினரே மறக்க முடியா உறவின் பால்
வருடி வரும் உன் நினைவுகள் வட்டமிடுகிறது உன் நினைப்பால்
வருஷம் ஒன்று போனது இப்போது வரும் ஓராயிரம் ஆண்டிலும்
எம் - நெஞ்சில் வாழ்வாய் உரிமையின் பால்

**கலைமகள் இல்லம்.**
**தம்பசிட்டி, பருத்தித்துறை.**
Contact: 021 226 3733

துயரத்தின் ஏக்கத்துடன்.....
**குடும்பத்தினர்**

(cr.44063) (N-1)

# 2 ஆம் ஆண்டு நினைவேந்தல்



## அமரர் கைலாசபிள்ளை சீவரத்தினம்
## (பஞ்சலிங்கம்)

(யா/ வேம்படி மகளிர் கல்லூரி,
யா / மத்திய கல்லூரி முன்னாள் ஆசிரியர்)

முந்தை நற்தவங்கள் பலகோடி செய்தோம்
எந்தையாய் இறைவனாய் எல்லாமாய் எங்களை
முந்தியிருப்ப அவை தனிலே முழுதாய்
முயன்றாய் ஜெயம் கொண்டாய்

மழைக்குக் குடையாய் பசிநேரத்துக்குணவாய்
- எம் வாழ்வில் இலக்கணமாய்
எல்லாமாய் இருந்தீர்கள் இரண்டாண்டாய்
- தேடுகின்றோம்
சிந்தா குலம் தீர்ந்து செம்மையாய் நாம் வாழ
நந்தா விளக்காய் நகர்ந்து வழி நடத்திடுக.

**நெஞ்சில் என்றும் நீங்கா நினைவுடன்**
**குடும்பத்தினர்**

தோற்றம்
01.04.1950

மறைவு
10.01.2023

(cs 2238) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடதாரகை சேவையில் நெடுந்தாரகை முடக்கத்தில்

யாழ்ப்பாணம், ஜன.10

இயந்திரக் கோளாறு காரணமாக செயலிழந்த நிலையில் காணப்பட்ட வடதாரகை திருத்தப்பணிகளின் பின் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. எனினும் நெடுந்தாரகைப் படகு நங்கூரமின்றி சேவையில் ஈடுபடமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் குறூஸ் தெரிவித்துள்ளார்.

வடதாரகை நேற்றுமுன்தினம் முதல் தனது சேவையை ஆரம்பித்துள்ளது. அதேவேளை கடந்த சீரற்ற காலநிலையின் பொழுது நெடுந்தாரகைப் படகின் நங்கூரம் கடலில் காணாமற் போயுள்ளது. இதன் காரணமாக நெடுந்தாரகை தற்காலிகமாக சேவையில் இருந்து விலக்கப்பட்டுள்ளது. நங்கூரம் கண்டெடுக்கப்படவில்லையெனில் புதிய நங்கூரம் ஒன்றைக் கொள்வனவு செய்து சேவையை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். அதேவேளை இதுதொடர்பில் இலங்கைக் கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய, நங்கூரத்தைத் தேடும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று குறிப்பிட்டார். (ச-125)

### சத்திர சிகிச்சையில்

## பார்வையிழந்தோருக்கு நட்டஈடு

நுவரெலியா மாவட்ட மருத்துவமனையில் கண் சத்திரசிகிச்சை மேற்கொண்டுள்ள 17 நோயாளர்களுக்கு கண் பார்வை இழக்கப்பட்டமைக்கான நட்டஈடு செலுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி 12 நோயாளர்களுக்கு 10 இலட்சம் ரூபா வீதமும் 2 நோயாளர்களுக்கு 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதமும் ஒரு நோயாளிக்கு 7 இலட்சம் ரூபாவும் 2 நோயாளர்களுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதமும் இழப்பீடு செலுத்தப்படவுள்ளது. (ச-இ)

**யாழ். மாவட்ட பூப்பந்தாட்டச் சங்க பொதுக்கூட்டம்**

- **காலம் : 12.01.2025 ஞாயிற்றுக்கிழமை**
- **நேரம் : முற்பகல் 10.00 மணி**
- **இடம் : அரியாலை**

**சரஸ்வதி சனசமூக நிலையம்**

யாழ். மாவட்ட பூப்பந்தாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களில் இருந்து இரு பிரதி நிதிகள் கலந்துகொள்ளவும்

**செயலாளர்,**
**யாழ். மாவட்ட பூப்பந்தாட்டச் சங்கம்.**

(cr 44068) (N-1)

**மணிவிழா வாழ்த்து**




**திருமதி கமலாம்பிகை நித்தியானந்தன்**
**SLTS - 1, SP.TRD - Primary**

சேவை நிலையமும் காலமும்

- யா/ இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் - 17.08.1988 - 19.01.1992
- யா/ கோப்பாய் ஆசிரியர் கலாசாலை - 20.01.1992 - 31.12.1993
- யா/ இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் - 01.01.1994 - 09.01.1994
- யா/ வரணி மகா வித்தியாலயம் - 10.01.1994 - 04.04.1999
- யா/ இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் - 05.04.1999 - 14.02.2010
- யா/ வரணி வடக்கு சைவப்பிரகாசா வித்தியாலயம் - 15.02.2010 - 22.04.2018
- யா/ கரம்பை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை - 23.04.2018 - 09.01.2025

இன்றுடன் ஓய்வுபெறும் ஆசிரியை ஆரோக்கியமாகவும், சிறப்பாகவும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/ கரம்பை அமெரிக்கன் மிஷன் தமிழ்கலவன் பாடசாலை, நாவற்காடு, வரணி.

# மருந்தகத்தினுள் புகுந்து திருடர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம், ஜன.10

அச்சுவேலி நகரப்பகுதியிலுள்ள மருந்தகத்தின் கதவை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் 1 இலட்சத்து 74 ஆயிரம் ரூபா பணம் மற்றும் புத்தாண்டுக்காக வாங்கி வைத்திருந்த உடைகள் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனரென பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பான விரிவான விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-25, 23)

# மாவாவுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜன.10

சங்கானைப் பகுதியில் மாவா பாக்குடன் இளைஞர் ஒருவர் மானிப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ரோந்து நடவடிக்கையின் போது சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த இளைஞர் ஒருவரை வழிமறித்து சோதனையிட்டபோதே அவரிடமிருந்து 10 கிராம் மாவா பாக்கை பொலிஸார் கைப்பற்றினர்.

சந்தேகநபர் மீது வழக்குப் பதிவு செய்து நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)



வேலணைப் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு அலகினரின் ஏற்பாட்டில், பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தரின் தலைமையில், சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு மண்கும்பான் அ. த. க. பாடசாலையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (ச-25, 9)

# பாவனை செய்யப்பட்ட வாகனங்கள் இறக்குமதி?

### அரசாங்கம் ஆராய்வு

கொழும்பு, ஜன.10

ஐந்து வருடங்கள் பாவித்த வாகனங்களை ஐம்பது இலட்சம் ரூபா செலவில் இறக்குமதி செய்வது பற்றி ஆராய்ந்துவருவதாக மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியத்தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் மட்டும் தனிநபர்கள் யாராவது அதிக விலை கொடுத்து புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்ய விரும்பினால் அது பற்றிப் பரிசீலிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-45-6)

# கொக்கெய்னுடன் வெளிநாட்டவர் கைது

கொழும்பு, ஜன.10

9 கோடியே 70 இலட்சம் ரூபா பெறுமதியான கொக்கெய்ன் போதைப் பொருளுடன் வெளிநாட்டவர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய முனையத்தில் வைத்து போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொதிகளினுள் சூட்சுமமாக மறைத்து 2 கிலோ 759 கிராம் கொக்கெய்ன் போதைப்பொருளை அவர் எடுத்துவந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர் பொஸ்னிய பிரஜை எனவும் அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

# புலமைப்பரிசில் பரீட்சை மதிப்பீடுகள் ஆரம்பம்

கொழும்பு, ஜன.10

2024 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மதிப்பீட்டுப் பணிகள் நிறைவடைந்த பின்னர் 40 நாள்களுக்குள் பெறுபேறுகள் வெளியிடப்படும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்கு 2 இலட்சத்து 44 ஆயிரத்து 92 மாணவர்கள் சிங்களமொழி மூலமும் 79 ஆயிரத்து 787 மாணவர்கள் தமிழ்மொழி மூலமும் தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பள முரண்பாடுகள் ஆய்வுப்பணி ஆரம்பம்


கொழும்பு, ஜன.10

அரச சேவைகளில் நிலவிவரும் சம்பள முரண்பாடுகளைக் களைவதற்கான ஆரம்ப ஆய்வுப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாணசபை அமைச்சு தெரிவித் துள்ளது.

தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள், கடந்த அரசாங்கங்களின் சில தீர்மா னங்கள் போன்ற காரணிகளினால் அரசசேவையில் ஒவ்வொரு தரத்துக்கும் இடையில் கடுமையான சம்பள முரண் பாட்டு நிலைமை நீடிக்கின்றது.

இந்த முரண்பாடுகளைக் களைவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச ஊழியர்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் சம்பள முரண்பாடுகளைக் களைவது சவால் மிக்கது என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## அலங்காரங்களை அகற்ற 3 மாதகால அவகாசம்

கொழும்பு, ஜன.10

தனியார் பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ள அத்தியாவசி யமற்ற உதிரிப்பாகங்களை அகற்றுவதற்கு மூன்று மாதகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

பிரதிப்பொலிஸ்மா அதிபருக்கும் தனியார் பேருந்து உரிமை யாளர் சங்கத்தினருக்குமிடையே நேற்றுமுன்தினம் இடம் பெற்ற கலந்துரையாடலின்போதே இந்தக் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் 'தூய இலங்கை' செயற்றிட்டத்தின் கீழ் வாகனங் களில் பொருத்தப்பட்டுள்ள அத்தியாவசியமற்ற உதிரிப்பாகங் களை அகற்றிவரும் நிலையில் அதற்குப் பல்வேறு எதிர்ப்பு கள் கிளம்பிவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ச-6)

## திறந்த நாடாளுமன்ற ஒன்றியத்தின் இணைத்தலைவராக சாணக்கியன்

கொழும்பு, ஜன. 10

பத்தாவது நாடாளுமன்றத்தில் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்ட திறந்த நாடாளுமன்ற முன்னெடுப்புக்கான ஒன்றியத்தின் இணைத் தலைவர்களாக அமைச்சர் பேராசிரியர் கிரிஷாந்த அபேசேன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

முதலாவது கூட்டம் நேற்றுமுன்தினம் நாடா ளுமன்றில் இடம்பெற்றபோதே இந்தத் தெரிவு இடம்பெற்றது. (ச-இ)



## டிப்பர் - பட்டா விபத்து

கிளிநொச்சி, ஜன. 10

கிளிநொச்சியில் நிறுத்திவைக்கப்பட்ட பட்டாரக வாகனத்தை அதிவேகமாகப் பயணித்த டிப்பர் வாகனம் மோதித்தள்ளியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு ஏ-9 வீதி கரடிப்போக்குச் சந்தியில் இடம்பெற்றுள்ளது. விபத்தில் பட்டாரக வாகனம் முழுமையாகச் சேத மடைந்துள்ளது அருகிருந்த வர்த்தக நிலையங் களும் சேதமாக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர் பாக கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-113)

## கண்ணீர் அஞ்சலி



எமது மன்ற உறுப்பினர்

**சின்னத்தம்பி தவராசா**

(உரிமையாளர், முத்துமாரி அம்மன் மரக்காலை, கண்டி வீதி, சாவகச்சேரி)

அவர்கள் நேற்றுமுன்தினம் (08.01.2025) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தோற்றம் 24.01.1966 — மறைவு 08.01.2025

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

## காலியில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, ஜன. 10

காலி மாவட்டத்தின் அஹுங்கல நகரில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படு காயமடைந்துள்ளார். அஹுங்கல பகுதியைச் சேர்ந்த முச்சக்கரவண்டிச் சாரதியே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இரு வர் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள் ளரென பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## மரண அறிவித்தல்



**ஆனந்தகுமாரசாமி சரோஜாவதி**

(ஓய்வு பெற்ற தேயிலை ஆராய்ச்சி நிலைய உத்தியோகத்தர்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் காரைநகர் மருதடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்தகுமாரசாமி சரோஜாவதி (ஓய்வு பெற்ற தேயிலை ஆராய்ச்சி நிலைய உத்தியோகத்தர், தலவாக்கலை) அவர்கள் நேற்று (09.01.2025) அமரத்துவம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-பார்பதிதேவி தம்பதிகளின் அன்பு மகளும் கலாநிதி ஆனந்தகுமாரசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அருளையா-நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும் பிறேமாவதி (லண்டன்), காந்திமதி (லண்டன்), ஸ்ரீதரன் (முன்னாள் லங்கா சீமெந்து உத்தியோகத்தர்), சிவபாலன் (நியூசிலாந்து), காலஞ்சென்றவர்களான பாஸ்கரன் (முன்னாள் ஆசிரியர், யாழ் இந்துக் கல்லூரி), பானுமதி (முன்னாள் உப அதிபர்-வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவபாதசுந்தரம் (பொறியியலாளர்-சிங்கப்பூர்), நமசிவாயம்பிள்ளை (ஆசிரியர், காரைநகர்), பாலகிருஷ்ணன், செல்வராஜன், ஞானபூரணி, கலாவல்லி மற்றும் காலஞ்சென்ற சுமித்திரா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மருதடி, காரைநகர்

தகவல்: குடும்பத்தினர்.

(C-7777) P-1

## எரிபந்தம் நோயினால் நெற்செய்கை பாதிப்பு

முல்லைத்தீவு, ஜன.10

முல்லைத்தீவில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கை எரிபந்தம் நோய்த் தாக்கத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை வெளி யிட்டுள்ளனர்.

மழை வெள்ளத்தின் பின்னர் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்களே இந்த நோயினால் பீடிக்கப்பட்டு அழியும் நிலையிலுள்ளன. ஒட்டுசுட்டான் பகுதி யில் கடுமையான பாதிப்புகள் பதிவாகி யுள்ளன. சிபார்சு செய்யப்பட்ட கிருமி நாசினிகள் தெளித்தும் எவ்வித பல னும் கிடைக்காததால் செய்வதறியாது உள்ளதாக விவசாயிகள் கவலை தெரி வித்தனர். (ச-25, 500)

### விபத்தில்...

என்பன நேற்றுமுன்தினம் இரவு நேருக் குநேர் மோதியதில் இந்த இறப்புச் சம்ப வித்துள்ளது. ஹைஏஸ் வாகனத்தின் அதிவேகமே விபத்துக்குக் காரணம் என்று முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படை யில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹைஏஸ்வாகனச்சாரதிநேற்றுபொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள் ளார். இறப்பு விசாரணைகளை வலிகா மம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதி காரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண் டார். (அ-ம-125-26-23)

### ஞானசார...

2016ஆம் ஆண்டு கொழும்பில் நடை பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட ஞானசாரதேரர், 'இஸ்லாம் ஒரு புற்று நோய், அது அழிக்கப்பட வேண்டும்' என்றவாறாக இஸ்லாம் மதத்துக்கு எதி ராகக் கடுமையான கருத்துக்களை முன் வைத்திருந்தார்.

இதையடுத்து, இனங்களுக்கு இடையி லான அமைதியைச் சீர்குலைக்கின்றார் என்ற குற்றச்சாட்டின் கீழ் அவருக்கு எதி ராக வழக்குத் தொடரப்பட்டது. சுமார் 8 வருடங்களுக்கும் மேலாக இடம்பெற்று வந்த இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது. இதன்போதே, அவ ருக்கு ஒன்பது மாதங்கள் சிறைத்தண் டனை விதிக்கப்பட்டது.

ஞானசாரதேரர் தன்னுடைய கருத்தின் மூலம், இனங்களுக்கு இடையிலான நல்லுறவைச் சீர்குலைத்து, அமைதிக் குப் பங்கம் விளைவிக்கும் குற்றத்தைப் புரிந்துள்ளமை சந்தேகத்துக்கு இட மின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு மேலதிக நீதவான் பசன் அம ரசேன தனது தீர்ப்பின் போது தெரிவித் துள்ளார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்பு...

விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டு, உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தபின்னர் பாதுகாப்பு அமைச்சுக்கு அளவுக்கு அதிகமான தொகை ஒதுக்கப்படுகின்றது என்று தேசிய மக்கள் சக்தியினர் கடந்த காலங்களில் விமர்சித்து வந்தனர். இவ்வாறிருக்கையில், தற்போது அவர்களின் ஆட்சியிலும், பாதுகாப்பு அமைச்சுக்குப் பெரும் தொகை ஒதுக்கப்பட்டுள்ளமை பல்வேறு விவாதங்களை உருவாக்கியுள்ளது.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடியது. இதன்போது வரவு - செலவுத்திட்டத்தை பிரதமர் ஹரிணி அமரசூரிய முன்வைத்தார். 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் மொத்த செலவீனமாக 4 ஆயிரத்து 616 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கே கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 713 பில்லியன் ரூபா மேற்படி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சுக்கு 442 பில்லியன் ரூபாவும், சுகாதார அமைச்சுக்கும், ஊடகத்துறை அமைச்சுக்கும் 507 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சுக்கு 473.4 பில்லியன் ரூபாவும், சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சுக்கு 406 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சுக்கு 399.16 பில்லியன் ரூபாவும், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி அமைச்சுக்கு 496 பில்லியன் ரூபாவும், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சுக்கு 271 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சுக்கு 175 பில்லியன் ரூபாவும், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுக்கு 54 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்கு 207 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தின் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது டன், இரண்டாம் வாசிப்பு வாக்கெடுப்பு பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி பிற்பகல் இடம்பெறவுள்ளது.

பெப்ரவரி 27ஆம் திகதிக்கும் மார்ச் 21ஆம் திகதிக்கும் இடையில், வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் நடத்தப்படவுள்ளது. வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு மார்ச் மாதம் 21ஆம் திகதி பிற்பகல் நடைபெறவுள்ளது. (அ-ம-44)

## மண்ணெண்ணெய்...

பகுதியைச் சேர்ந்த தர்சிகன் சஷ்வின் என்ற 14 மாதக் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தையின் தாயார் உணவு தயாரித்துக் கொண்டிருந்தபோது, கட்டிலுக்குக் கீழ் வைக்கப்பட்டிருந்த மண்ணெண்ணையை எடுத்து அந்தக் குழந்தை அருந்தியதுடன், தனது உடலிலும் ஊற்றி விளையாடியுள்ளது. சிறிது நேரத்தில் குழந்தை மயக்கமுற்றதைப் பார்த்த குடும்பத்தினர் கோப்பாய் மருத்துவமனைக்குக் கொண்டுசென்றுள்ளனர். மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில், சிகிச்சையின்போது குழந்தை உயிரிழந்துள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## துமிந்தவுக்கு...

காரணத்துக்காகவும் மன்னிப்பு வழங்கப்பாது என்று பிரதி நீதியமைச்சர் மஹிந்த ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

துமிந்த சில்வாவின் உடல்நிலையைக் கருத்திற்கொண்டு அவரை மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டும் என்ற வாறாக ஊடகமொன்றில் வெளியாக தகவல்களைத் தொடர்ந்தே, பிரதி நீதிய மைச்சர் மஹிந்த ஜெயசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

துமிந்தவுக்கு மருத்துவக் கண்காணிப்புத் தேவையா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக மருத்துவக் குழுவொன்று பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளது. இதன் பின்னரே இது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பிரதி நீதியமைச்சர் மஹிந்த ஜெயசிங்க மேலும் கூறியுள்ளார். (அ-ம-இ)

## காணாமலாக்கப்...

உறுப்பினர் ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீண்டகாலமாக விசாரணை எதுவுமின்றி சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டு, அவர்கள் சமூக வாழ்க்கையை வாழ்வதற்கு ஏதுவான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது எமது அரசின் கடமையாகும். அத்துடன், காணாமலாக்கப்பட்டோர் விடயத்திலும் ஒரு தெளிவான பதிலைக் கொடுத்து, அவர்களின் உறவுகள் நிம்மதியான வாழ்க்கையை வாழ்வதற்கு வழிகளை ஏற்படுத்த வேண்டும்.

எமது பகுதியில் போதைப்பொருள் பிரச்சினையும் உள்ளது. இரும்புக்கரம் கொண்டு அவற்றை ஒடுக்க வேண்டும். தொழிற்சாலைகளை ஏற்படுத்தி எமது இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இதற்கு உதவிசெய்ய புலம்பெயர் உறவுகள் காத்திருக்கின்றனர். எனவே, அவர்களுக்குரிய இரட்டைக் குடியுரிமை வசதிகளை செய்துகொடுக்க வேண்டும்' - என்றார். (அ-ம-44)

## மீட்கப்பட்ட...

புதைகுழி மற்றும் மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி தொடர்பான வழக்குகள் விசாரணைகள் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.

**சதொச மனிதப்புதைகுழி**

இதன்போதே, சதொச மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட என்புத்தொகுதிகள் சில மேலதிக பகுப்பாய்வு நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி மருத்துவர் செல்வைரட்ணம் பிரணவன் தலைமையிலான குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டன. இன்னொரு தொகுதி என்புகள் இன்று ஒப்படைக்கப்படவுள்ளன. இறப்புக்கான காரணம், வயது, பால்நிலை போன்ற விடயங்களை வெளிப்படுத்தும் வகையில் இந்தப் பகுப்பாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**திருக்கேதீஸ்வரம் புதைகுழி**

அதனைத் தொடர்ந்து மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி வழக்கு விசாரணை இடம்பெற்றது. இதன்போது கொழும்பு சட்ட மருத்துவ அதிகாரியால் ஏற்கனவே பகுப்பாய்வு செய்யப்பட்ட 81 மனித எச்சங்களில் 27 மனித எச்சங்களுக்கான அறிக்கைகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. மிகுதி மனித எச்சங்களுக்கான அறிக்கை 6 மாத காலத்தில் மன்றில் கையளிக்கப்படும் என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு மார்ச் மாதம் 12ஆம் திகதி மீண்டும் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படும் என்று நீதிமன்றம் திகதியிட்டுள்ளது. (அ-ம-56-26)

## நட்புறவுச்...

சந்தோஷ் ஜாவுக்கும், இலங்கை நாடாளுமன்றத்தின் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றுள்ளது. இதன் போதே, இலங்கை - இந்திய நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தை மீள உருவாக்கும் தனது விருப்பத்தை சந்தோஷ் ஜா வெளிப்படுத்தியுள்ளார்.

அத்துடன், நாடாளுமன்றங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை வளர்ப்பதன் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில், சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா அழைப்பு விடுத்துள்ளார். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், பயனுள்ள கொள்கை வகுப்பில் பெண்களின் வகிபங்கை மேம்படுத்துதல், பெண் நாடாளுமன்றக் குழுக்களுக்கு இடையே நெருக்கமான தொடர்பை வலுப்படுத்துதல் ஆகிய துறைகளில் இணைந்து செயற்பட வேண்டிய கட்டாயம் குறித்தும் தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன ஆகியோர் கலந்துரையாடியுள்ளனர். (அ-ம-இ)

## சைக்கிளில்...

அச்சுவேலிப் பொலிஸாரால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. 'தூய இலங்கை' திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள சட்ட ஏற்பாட்டுக்கமையவே அவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வழக்கமாக மோட்டார்சைக்கிள் மற்றும் வாகனங்களில் (சைக்கிள் தவிர்ந்த) பயணிப்போர் மதுபோதையில் வாகனம் செலுத்தினாலேயே அவர்களுக்கு பெருந்தொகை பணம் தண்டமாக விதிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், மதுபோதையில் சைக்கிளில் பயணித்த ஒருவருக்கும் பெருந்தொகை தண்டமாக விதிக்கப்பட்டுள்ளமை முக்கியத்துவம் மிக்க விடயமாகப் பார்க்கப்படுகின்றது. (அ-ச-23)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 . 11 . 1937 | 08 . 01 . 2025 |

**பத்மநாதன் கண்மணி (பத்மா)**

தாவடியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இல 74 மணிக்கூட்டு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் கண்மணி அவர்கள் நேற்று முன்தினம் (08.01.2024) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ராமு-சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், கோவிந்தப்பிள்ளை-லட்சுமி தம்பதியினரின் பெறாமகளும் காலஞ்சென்ற பத்மநாதனின் பாசமிகு மனைவியும், விஜயகுமார், பரஞ்சோதி, மகேஸ்வரன், காலஞ்சென்ற ரத்னவடிவேல், ஜோகேஸ்வரன், விஜயகுமார் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் பிரம்மானந்தர், கேதீஸ்வரி, சர்வானந்தர், சிவானந்தர், விக்னேஸ்வரி, காலஞ்சென்ற விஷ்மானந்தர் ஆகியோரின் பாசமிகு தாயும் கேதீஸ்வரி, கதிர்காமநாதன், கௌசலகுமாரி, கௌசல்யா, சிவராஜா ஆகியோரின் அன்புமிகு மாமியாரும் விஷ்ணுபிரியா, விஷ்ணுகா, பிரணவன், நிந்துஜன், பிருந்தன், மாதுசன், சஹானா, நிலா, கஜமுகன், சபேஜன், சாயினி, சரண்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மாஜா, அயிரா, அஜன், அயிஜன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 74 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

021 222 9234 , 077 356 2336

(CS 315) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்துறைகள் வேகமாக வீழ்ச்சி

## உலக பொருளாதார மன்றம் தெரிவிப்பு

பல தொழிற்றுறைகள் வேகமாக வீழ்ச்சியடைந்து வருகின்றன என உலக பொருளாதார மன்றம் தெரிவித்துள்ளது. ஆயிரம் நிறுவனங்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

காசாளர்கள், டிக்கெட்டுகள் விற்பனை செய்வோர், நிர்வாக உதவியாளர்கள், நிர்வாக செயலாளர்கள், கட்டடப் பராமரிப்பாளர்கள், வீட்டுவேலைக்காரர், சுத்திகரிப்புத் தொழிலாளர்கள், பொருள் பதிவு எழுதுநர்கள், களஞ்சியசாலை எழுதுநர்கள், அச்சுத்துறையுடன் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள், கணக்குப்பதிவு மற்றும் சம்பளப்பட்டியல் தயாரிக்கும் எழுதுநர்கள், கணக்காளர்கள், கணக்குப்பதிவாளர்கள், போக்குவரத்து உதவியாளர்கள், நடத்துநர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், வங்கிக் கணக்குமீதி தெரிவிப்பவர்கள், எழுதுநர்கள், தரவுப்பதிவாளர்கள், வியாபார நிர்வாகசேவை முகாமையாளர்கள், சம்பளக் கொடுப்பனவு பரிசோதிப்போர், புலனாய்வு செய்வோர், பக்கவடிவமைப்பாளர்கள் போன்ற தொழிற்றுறைகள் வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதாக உலகபொருளாதார மன்றம் மேற்கொண்ட ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-33-6)

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி நுணாவில் மேற்கு
பேச்சியம்மன் கோயிலடி கண்டி வீதியில்
இருந்து 300m தூரத்தில்
10 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

**077 224 7902**

**வேலைவாய்ப்பு (Only Females)**

- **முன்பள்ளி ஆங்கில ஆசிரியர்**
  (ஆங்கிலம் சரளமாக பேசக் கூடியவர்)
- **சிங்கள ஆசிரியர்**
  (ஆரம்ப எழுத்துப் பயிற்சி எழுதக்கூடியவரும் உரையாடக் கூடியவரும்)
- **கணினி நிலைய ஆசிரியர்**
  (Photoshop, Page Maker, Coreldraw நன்கு தெரிந்தவர்)
- **பழக விரும்புபவர்களுக்கு**
  (3 மாத கால பயிற்சி வழங்கப்படும்)

**புத்தூர், யாழ்ப்பாணம், இனுவில், தெல்லிப்பளை**
ஆகிய இடங்களுக்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர்.

நேர்முகத்தேர்வு நடைபெறும் திகதி 11.01.2025 சனிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை நடைபெறும்.
உரிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்
**சிவபதி, கே.கே.எஸ். றோட், இனுவில்.**

தொடர்பு: **077 377 0524**

(cs 571461 9N-1)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு 05 . 01 . 1963

உதிர்வு 12 . 12 . 2024

கடந்த 12.12.2024 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் சின்னத்தம்பி பரஞ்சோதி**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (11.01.2025)
சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது
இல்லத்தில் நடைபெற இருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள்
குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும்
மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.


(இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

(cs.51150) (N-1)

குடும்பத்தினர்.
077 1510 657

# 41ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 23.02.1963 — இறப்பு 01.12.2024

அன்பின் இறைவா மண்ணில் இருந்து
விண்ணிற்கு அழைத்துக் கொண்ட உமது
அடியான் செபஸ்தியாம்பிள்ளை ஜெயந்திரன்
அவர்களுடைய பாவங்களை மன்னித்து
உமது விண்ணக வான் வீட்டில் நித்திய
இளைப்பாற்றியை அளித்தருளும்.

**அமரர் திரு செபஸ்தியாம்பிள்ளை ஜெயந்திரன்**

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வார்:

எங்கள் அன்பு மாமா!
நாம் எதிர்பாராத இழப்பொன்று நிகழ்ந்ததுவே
எங்கள் வீட்டின் சிரிப்பொலி உதிர்ந்ததுவே
எம்மோடு நெடுநாள் வாழ்வீரென்றெல்லோ எண்ணியிருந்தோம்
ஐயா நிம் சிரிப்பு இன்னும் எம் மனதை விட்டு மறையவில்லையே
வீட்டில் பண்டிகைகள் என்றால் உம் புன்னகைகள் கோலமிடுமே
இன்று முற்றுமாய் ஒய்ந்துள்ளது எம் வீடுகள்
இயலாது என்றும் உம் கால் கைகள் ஒய்ந்ததில்லை
முடியும் என்று முயற்சி செய்து எழுந்திடுவாய் பொலிவுடனே
உம் இழப்பை ஈடுசெய்ய முடியாது
தவிக்கும் எம் அத்தையின் நிலை நீ காணவில்லையா?
உன் முகம் தேடி நாடி வரும் உடன் பிறப்பின்
அழுகுரலை நீ கேட்கவில்லையா?
நீர் பெற்ற செல்வங்கள் உம்மை ராஜாவாக
பார்க்க வேண்டும் என்ற ஆசையை உணரவில்லையா?
ஐயா நீர் செய்த நன்மைகளை நாம்
அறிந்தது உம் இறப்பில் தானே
மீண்டும் உம்மை காண மாட்டோமே
என்ற எம் ஏக்கம் தீரவில்லை ஐயா!
நீர் நடமாடும் நினைவலைகள்
அங்கு இங்கு என்று தேடுகிறதே எம் கண்கள்
ஐயா நீர் வேதனையில் துடிதுடித்ததை நம்மால் மறக்க முடியுமோ!
வேதனை போதும் என்று நினைத்து தான்
எம்மை விட்டு நெடுந்தூரம் சென்றாயோ!
சந்திப்போம் ஓர் நாள் நாம் பேரின்ப வீட்டில்



இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 10.01.2025 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியிலும் மதியம் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பூநாறி மரவீதி,
கொக்குவில் மேற்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
076 198 5096

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111   செய்தி : news@uthayan.com   விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org